திமிர்ந்த ஞன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**November 27, 2018**

தினமணி, தேதி: 27.11.2018 பக்கம் - 3

# மாவட்ட அளவில் மனித உரிமைகளுக்கென தனி நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும்

## நீதிபதி அரிபரந்தாமன்

**சென்னை, நவ. 26:** மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்க மாவட்ட அளவில் தனி நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும் என ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன் தெரிவித்தார்.

சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி, சோகோ அறக்கட்டளை, நீதிபதி சிவராஜ் வி.பாட்டில் அறக்கட்டளை ஆகியவற்றின் சார்பில் 15 நாள்கள் நடைபெறும் மனித உரிமைகள் குறித்த சான்றிதழ் படிப்புத் தொடக்க விழா சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு அக் கல்லூரியின் முதல்வர் ரோஸி ஜோசப் தலைமை வகித்தார். சோகோ அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ஏ.மெகபூப் பாட்ஷா வரவேற்றார். ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா சான்றிதழ் படிப்பைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.




சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற மனித உரிமைகள் குறித்த சான்றிதழ் படிப்பு தொடக்க விழாவில், அந்தக் கல்லூரியின் டீன் லூர்து மேரிக்கு புத்தகத்தைப் பரிசாக வழங்கும் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அரிபரந்தாமன்.

விழாவில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன் பேசியது: உலக அளவில் பெண்கள், குழந்தைகள், சிறுபான்மை, தலித் மக்கள் தான் மனித உரிமை மீறலில் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். அதில், குறிப்பாக கடந்த சில மாதங்களாக தமிழகத்தில் தலித் மக்கள், பெண்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்கும் மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையை தமிழக அரசு பொருட்டாகவே எடுத்துக் கொள்வதில்லை.

இதனால், பாதிக்கப்பட்டோருக்கான நீதி என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்க மாவட்ட அளவில் தனி நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். ஒவ்வொருவரும் நமது அடிப்படை அரசியலமைப்புச் சட்டத்தை தெரிந்து கொள்வது அவசியம் என்றார்.

இந்த நிகழ்ச்சியில், முன்னாள் டிஜிபி வி.ஆர்.லட்சுமிநாராயணன், ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் டீன் லூர்து மேரி, நீதிபதி சிவராஜ் வி.பாட்டில் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எஸ்.செல்வகோமதி, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் சமூக நலத் துறைத் தலைவர் ஜெ.பியூலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.